பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 01 2025 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அரசியல் சாசனம் மற்றும் தேசிய கீதத்தை அப்பட்டமாக அவமதிக்கும் செயல்களுக்கு உடந்தையாக இருந்துவிடக்கூடாது என்ற காரணத்தினால்தான் ஆளுநர் திரு ஆர் என் ரவி மிகுந்த வேதனையுடன் சட்டப்பேரவையிலிருந்து வெளியேறியதாக ஆளுநர் மாளிகை கூறியுள்ளது.

2. மாநில ஆளுநருடன் முரண்பட்டு சட்டத்திற்கு விரோதமாக செயல்படும் போக்கினை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கைவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

3. அரசியல் சட்டப்படி ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை மாநில ஆளுநர் வாசிப்பது என்ற சட்டப்பேரவை மரபு, தற்போது மீறப்படுவது வழக்கமாகியுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. **HMPV** வைரஸ் பாதிப்பு குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. அயர்லாந்துக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

அரசியல் சாசனம் மற்றும் தேசிய கீதத்தை அப்பட்டமாக அவமதிக்கும் செயல்களுக்கு உடந்தையாக இருந்துவிடக்கூடாது என்ற காரணத்தினால்தான் ஆளுநர் திரு ஆர் என் ரவி மிகுந்த வேதனையுடன் சட்டப்பேரவையிலிருந்து வெளியேறியதாக ஆளுநர் மாளிகை கூறியுள்ளது.

இதுதொடர்பாக, ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழக சட்டப்பேரவையில் இன்று அரசியலமைப்புச்சட்டம் மற்றும் தேசியகீதம் அவமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கீதத்திற்கு உரிய மரியாதை வழங்க வேண்டும் என்பது அரசியல் சாசனம் வழங்கியுள்ள முதலாவது அடிப்படை கடமையாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநில சட்டப்பேரவைகளில் ஆளுநர் உரையின் தொடக்கத்திலும், முடிவிலும் தேசியக்கீதம் பாடப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தின்போது தமிழ்தாய் வாழ்த்து மட்டுமே பாடப்பட்ட நிலையில், தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற பேரவையின் அரசியலமைப்பு கடமையை மரியாதையுடன் நினைவூட்டியதாக கூறப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் மற்றும் முதலமைச்சரிடம் இதுகுறித்து ஆளுநர் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தும், அவை நிராகரிக்கப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஆளுநர் மிகுந்த வேதனையுடன் பேரவையை விட்டு வெளியேறியதாகவும் ஆளுநர் மாளிகை கூறியுள்ளது.

இதனைத்தொடர்ந்து இன்று மாலை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், சட்டப்பேரவை நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக தணிக்கை செய்யப்பட்டு, மாநில அரசின் வெட்டப்பட்ட காட்சிகள் மட்டுமே வழங்கப்பட்டதாகவும், இது அவசரகாலத்தையே நினைவூட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச்சட்டத்தால் உறுதி செய்யப்பட்டுள்ள பத்திரிகை சுதந்திரத்தின் அடிப்படை உரிமையும் இதன்மூலம் நசுக்கப்பட்டுள்ளதாகவும் இது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய இணையமைச்சர் திரு எல். முருகனும், சட்டப்பேரவையில் தேசிய கீதம் அவமதிக்கப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஆளுநர் உரையுடன் தொடங்கும் சட்டப்பேரவை கூட்டத்தொடரின்போது அனைத்து மாநிலங்களிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் மட்டும் ஆளுநருக்கு எதிராக செயல்பட வேண்டும் என்பதற்காக தேசியகீதம் அவமதிக்கப்படுவதாக அவர் குறை கூறியுள்ளார்.

தமிழக மக்களின் நலனுக்கு தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல், இதுபோன்ற தேவையற்ற அரசியலை திமுக அரசு செய்துகொண்டு, தேசவிரோதமாக நடந்துகொள்வது ஏற்புடையது அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும், அதை ஏற்க மறுத்த பேரவைத் தலைவரின் செயல் கண்டனத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநருடன் முரண்பட்டு அரசியல் சட்டத்திற்கு விரோதமாக செயல்படும் போக்கினை முதலமைச்சர் கைவிட வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை சட்டப்பேரவையில் ஆளுநர் வாசிப்பது பேரவை மரபு என்றும், அதனை மீறுவதை தமிழக ஆளுநர் வழக்கமாக கொண்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தமிழக மக்களையும், அரசையும், சட்டப்பேரவையையும் அவமதிக்கும் வகையில் ஆளுநர் செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

திமுக அரசு நிர்வாக தோல்வியை மறைப்பதற்காகவும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் ஆளுநர் மீது பழி சுமத்துவதை வாடிக்கையாக கொண்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர், 1991-ஆம் ஆண்டு வரை தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முன்பாக தமிழ்தாய் வாழ்த்து பாடப்படவில்லை என்று கூறியுள்ளார்.

1991-ஆம் ஆண்டு ஜூலை மாதம் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பொறுப்பில் இருந்தபோதுதான், ஆளுநர் உரையின் தொடக்கத்திலும், முடிவிலும் முறையே தமிழ்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநர் மற்றும் துணை நிலை ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற மத்திய அரசின் உத்தரவுகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் மக்களின் கவனத்தை திசை திருப்ப முதலமைச்சர் முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆளுநர் உரை தொடங்கும் முன்னரும், நிறைவுபெறும்போதும் தமிழ்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் வாசிப்பதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே பிஜேபி-யின் நிலைப்பாடு என்று திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழ் மக்களின் உணர்வுகளையும், மரபுகளையும் ஆளுநர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், ஆளுநருக்கு உரிய மரியாதையை அரசு அளிக்க வேண்டும் என்றும் பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை தெரிவித்துள்ள அவர், மகளிர் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, அரசு ஊழியர்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகள் போன்றவை குறித்து விவாதிக்காமல், மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையிலான எந்தவொரு செயலும் ஏற்புடையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

**HMPV** வைரஸ் பாதிப்பு குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பு பரவுவதை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக, நாடு முழுவதும் அண்மையில் முன்னெச்சரிக்கைக்கான ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஒருபகுதியாக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது கர்நாடகாவில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே **HMPV** வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான மருத்துவ கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை கூறியுள்ளது.

**<<<<<<>>>>>**

மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கான இணையதள பதிவு இன்று மாலை தொடங்கியது.

நாளை மாலை ஐந்து மணிவரை முன்பதிவு அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்தவர்களின் சான்றுகள் உரிய வகையில் சரிபார்க்கப்பட்டு தகுதியானவர்களுக்கு மட்டுமே டோக்கனை பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி வழங்கப்படும் என்றும் மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

**<<<<<<>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டத்தில் தலைக்கசவம் அணிய வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு மகாபாரதி இன்று தொடங்கிவைத்தார்.

------------------

கடலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டைதார்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பினை கொள்முதல் செய்வதற்கென 14 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு சிபி ஆதித்யா செந்தில்குமார் கூறியுள்ளார்.

---------------------

விழுப்புரம் மாவட்டத்தில் சிசிடிவி கேமராக்களை முறையாக பராமரிக்காத பள்ளிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு அறிவழகன் கூறியுள்ளார்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------

அரியலூர் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று புதிதாக பொறுப்பேற்றுள்ள காவல்துறை கண்காணிப்பாளர் திரு தீபக் சிவாச் கூறியுள்ளார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அயர்லாந்துக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Smriti Mandhana** தலைமையிலான இந்த அணியில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதலாவது ஆட்டம் வரும் 10-ஆம் தேதியும், இரண்டாவது போட்டி 12-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிப்போட்டி 15-ஆம் தேதியும் ராஜ்கோட்டில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---------------------

அடிலெய்டு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Angel Reyes Varela** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 4-6, 6-2, 10-7 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ரோஹன் போபண்ணா – கொலம்பியாவின் **Nicolas Barrientos** இணையை வென்றது.

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் பிரதான சுற்றில் பங்கேற்க இந்தியாவின் பிரியன்ஷு ரஜாவத் தகுதிபெற்றுள்ளார்.

----------------

பள்ளி மாணவர்களுக்கான உலக செஸ் சாம்பியன் போட்டி செர்பியாவில் மார்ச் மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, 29-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>**